# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 18 புதன்கிழமை 03.09.2025 கதிர் 298

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel



## வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் திறப்பு








வவுனியா, செப். 03

வவுனியாவில் கடந்த 2018ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலையம் 7 வருடங்களின் பின்னர் இன்று மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக கடந்த 2018ஆம் ஆண்டு வவுனியா மதவுவைத்தகுளத்தில் 293 மில்லியன் ரூபா செலவில் விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டது.

7

# முன்னாள் அமைச்சர் ராஜிதவிடம் 5 மணிநேரம் வாக்குமூலம் பதிவு!

## மீண்டும் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்



கொழும்பு, செப். 03

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று வாக்குமூலம் வழங்கிய பின்னர் மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஊழல் தொடர்பான விசாரணை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இன்று காலை இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது ராஜித சேனாரத்னவிடம் இருந்து 5 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது.

7

## ரயிலில் மோதி பெண் ஒருவர் பலி!

### கொடிகாமத்தில் இன்று துயரம்



தென்மராட்சி, செப். 03

யாழ். தென்மராட்சி, கொடிகாமம் பகுதியில் ரயிலில் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த உஷாநத் சங்கீதா (வயது 44) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி இன்று புதன்கிழமை பயணித்த ரயிலுடன் கொடிகாமம் பகுதியில் மோதி

7

## ரயிலில் மோதி இளம் குடும்பஸ்தர் சாவு!

### மட்டக்களப்பில் சோகம்



மட்டக்களப்பு, செப். 03

மட்டக்களப்பு, வந்தாறுமூலை பகுதியில் பாதுகாப்பாற்ற ரயில் கடவையில் சென்று கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார்.

7

## மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறு ம.ம.மு. வலியுறுத்து



நுவரெலியா, செப். 03

மாகாண சபைத் தேர்தல்களை நடத்த ஏதேனும் தடைகள் இருப்பின் அவற்றை நீக்கி அதிகாரப் பரவலாக்கத்தை அரசு துரிதப்படுத்த வேண்டும்

7

## மத்திய அதிவேக வீதி விபத்தில் இருவர் பலி



கொழும்பு, செப். 03

மத்திய அதிவேக வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று

7

# இராணுவத்தினரை பழிவாங்கும் அரசு பயங்கரவாதிகளை கொண்டாடும் போது அமைதி காக்கிறது




கொழும்பு, செப் .03

இராணுவத்தினரை பழிவாங்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. பயங்கரவாதிகளை கோலாகலமாக கொண்டாடும் போது அமைதி காக்கிறது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். மகாநாயக்க தேரர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்து மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவித்ததாவது,

30 வருடகால பயங்கரவாத யுத்தத்தில் இருந்து நாட்டை மீட்டெடுத்து 16 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. யுத்தம் முடிவடைந்தாலும் பயங்கரவாதத்தக் குரிய பிரிவினைவாதம் இன்றும் இல்லாதொழிய வில்லை என்பதை புரிந்துக்கொள்வது ஒன்றும் கடினமானதல்ல,

தாய் நாட்டை பாதுகாப்பதற்காக தனது உயிரையும் அர்ப்பணிப்பதற்கு முன்வந்த இராணுவத்தினர் இன்று பலிவாங்கப்படுவதன் ஊடாக அதனை விளங்கிக்கொள்ளலாம். இது வடக்கின் சாதாரண மக்களின் தேவைக்காகவல்ல என்பதை நாம் தெளிவாக புரிந்துக்கொண்டுள்ளோம்.

தற்போதைய ஆட்சியாளர்கள் இராணுவத்தினருக்கு எதிராக வெறுப்பான நிலைப்பாட்டை கொண்டுள்ளார்கள்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு பல்வேறு தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்பது ஒன்றும் இரகசியமல்ல.

அரசாங்கத்தின் ஊடாக இராணுவத்தினரை பலிவாங்குவது ஒரு தரப்பினரது பிரதான நோக்கமாகும். இரு தரப்பினருக்கும் இடையிலான தெளிவான புரிந்துணர்வுடன் இராணுவத்தை பலிவாங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பயங்கரவாதிகளை கோலாகலமாக கொண்டாடும் போது அரசாங்கம் அமைதி காக்கிறது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தின் அதிகாரிகளுக்கு சர்வதேச மட்டத்தில் தடைகள் விதிக்கப்படும் போது அரசாங்கம் அதற்கு எதிராக செயற்படுவதில்லை. பயங்கரவாதத்தை நியாயப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது.

தாய்நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர் தியாகம்செய்து, நாட்டுக்காக சேவையாற்றிய இராணுவத்தினருக்காக முன்னிலையாகும் தார்மீக பொறுப்பு வரலாற்றினால் எமக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த பொறுப்பை பிற தரப்பினருக்கு கையளிக்க முடியாது.

அரசியல் செயற்பாட்டாளர்களாகவும், பொது மக்களை உள்ளடக்கிய சமூக செயற்பாட்டாளர்களாகவும் நாங்கள் அந்த பொறுப்பை நிறைவேற்றுவோம். அதற்கு மகாநாயக்க தேரர்களின் ஆசிர்வாதத்தை கோருகிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)



# நெடுந்தீவு - கச்சதீவை இணைக்கும் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் சாத்தியப்பாடுகள் ஆராய்வு

நெடுந்தீவு , செப் .03

நெடுந்தீவு மற்றும் கச்சதீவை ஒன்றிணைக்கும் வகையிலான சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின் சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் இணைந்து நேற்று கச்சதீவுக்கு கண்காணிப்பு பயணம் மேற்கொண்டமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சத்தீவு பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் எமது மீனவ சொந்தங்களின் பாதுகாப்பு, அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அப்பகுதியில் மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டு திட்டங்கள் பற்றி கடற்படையினரிடம் கேட்டறிந்தோம்.

அதேபோல சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்குரிய பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நெடுந்தீவு மற்றும் கச்சதீவை ஒன்றிணைத்த வகையில் சுற்றுலா திட்டமொன்றை மேற்கொள்வதற்குரிய சாத்தியப்பாடு பற்றியும் கேட்டறியப்பட்டது.

நெடுந்தீவுக்கு தற்போது சுற்றுலாப் பயணிகள் வரும் நிலையில் அதனை கச்சதீவுவரை மேம்படுத்துவதற்குரிய திட்டம் உள்ளது." –என்றார்.

(ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்ரீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases

- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments

- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஜனாதிபதியின் தலைமையில் ஆரம்பம்











முல்லைத்தீவு, செப் .03

பொருளாதார சாத்தியங்களைக் கண்டறிந்து, பொருளாதாரத்தை விரிவுபடுத்தி மிகவும் திட்டமிடப்பட்ட வகையில் நாட்டை அபிவிருத்தி செய்வது தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் எனவும் கிராமிய மக்களை வறுமையிலிருந்து விடுவிப்பதற்கு தனது ஆட்சிக் காலத்தில் அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளை தொடங்கி வைக்கும் நிகழ்வில் இன்று (02) காலை கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இந்த செப்டம்பரில் நாடு முழுவதும் பல புதிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, அபிவிருத்தித் திட்டங்களை சரியான நேரத்தில் நிறைவு செய்யாமல், மதிப்பிடப்பட்ட தொகையை விட அதிகமாக செலவிடும் பழைய பாரம்பரியத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் சரியான நேரத்தில் நிறைவு செய்து மக்களுக்கு நன்மைகளை வழங்க அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார். பரந்தன்-கரச்சி- முல்லைத்தீவு வீதியில் நந்திக்கடல் வாவிக்கு அருகில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலத்தில் தினமும் 3,000க்கும் மேற்பட்ட வாகனங்கள் பயணிக்கின்றன. நீண்ட காலமாக பாலம் பழுதுபார்க்கப்படாததால், மிகவும் பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதன்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் புதிய இருவழிப் பாலமாக இதனை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1.4 பில்லியன் ரூபா அரச நிதியைப் பயன்படுத்தி செயல்படுத்தப்படும் இந்த திட்டம் 2027 செப்டம்பர் 02 ஆம் திகதி நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிகழ்வில் உரையாற்றிய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, 1.8 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்க மதிப்பிடப்பட்ட இந்த திட்டம், தற்போதைய அரசாங்கத்தின் ஊழலற்ற ஆட்சியின் காரணமாக 1.4 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்க குறித்த நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

எஞ்சிய ரூ. 400 மில்லியன் வன்னி மாவட்டத்தில் பாதைகளின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும் என்று கூறிய அமைச்சர், இந்த ஆண்டு வடக்கில் பாலங்கள் மற்றும் பாதைகள் அமைப்பதற்காக 12.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது, அடுத்த ஆண்டு இந்த ஒதுக்கீடு மேலும் அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

தற்போதைய அரசாங்கம் வடக்கின் ஒற்றுமையையும் வளர்ச்சியையும் கொண்டு வரும் அதே வேளையில் நாட்டை முழுவதுமாக கட்டியெழுப்பவும் உறுதிபூண்டுள்ளது என்று அமைச்சர் கூறினார். அரசாங்கத்தை ஒரு கற்பனையான கண்ணோட்டத்தில் இருந்தும், முன்பிருந்த அரசாங்கங்களைப் போன்று பார்க்காமல், அதன் பணிகள் மற்றும் செயல்கள் மூலம் மதிப்பிடுமாறு அவர் மக்களை கோரினார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சிரேஸ்ட பேராசிரியர் கபில சி.கே. பெரேரா மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)

## யாழில் தனியார் தொலை தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம, செப் .03

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு ஆழியவளை பகுதியில் தனியார் தொலை தொடர்பு

கோபுரம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வடமராட்சி கிழக்கு ஆழியவளை பகுதியில் இணையதள வசதி அண்மைக்காலமாக மந்தமான நிலையில் காணப்படுகிறது.

இதனை சரி செய்யும் வகையில் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்தால் தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்று ஆழியவளையில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றில் இதனை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் அப்பகுதியில் இருக்கும் குடும்பஸ்தர் ஒருவர் இதற்கு தனது எதிர்ப்பினை தெரிவித்துள்ளார்.

புற்றுநோய் மற்றும் கண் நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதால் இந்த தொலைத்தொடர்பு கோபுரத்தை இதில் நிறுவுவதால் கதிர்வீச்சால் தாம் மேலும் பாதிக்கப்பட்டு, உயிருக்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்பிருப்பதால் தமது பகுதியில் குறித்த தொலைத்தொடர்பு கோபுரத்தை அமைக்க வேண்டாம் என பிரதேச செயலகம், பிரதேச சபையிடம் கடிதம் மூலம் முறைப்பாடளித்துள்ளார்

சம்பவ இடத்திற்கு நேற்று வருகை தந்த பருத்தித்துறை பிரதேச சபை அதிகாரிகள் குறித்த தொலை தொடர்பு கோபுரம் எந்தவித அனுமதியும் இன்றி அமைக்கப்படுவதை சுட்டிக்காட்டி உரிய முறையில் அனுமதி பெற்ற பின் பணிகளை தொடருமாறும் அதுவரை பணிகளை இடைநிறுத்து மாறும் அறிவுறுத்தல் வழங்கி சென்றுள்ளனர். (ஐ)



## ஐக்கிய தேசியக் கட்சியின் 79வது ஆண்டு நிறைவு விழா ஒத்திவைப்பு

கொழும்பு, செப் .03

எதிர்வரும் சனிக்கிழமை (06) நடைபெறவிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் 79வது ஆண்டு நிறைவு விழாவை ஒத்திவைக்க ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழு தீர்மானித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. கொழும்பில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழு இந்த தீர்மானத்தை எடுத்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி தலதா அதுகோரல தெரிவித்தார்.

ஒத்திவைக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் 79வது ஆண்டு விழாவை இந்த மாதம் வேறு ஒரு நாளில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அதுகோரல மேலும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்ட மருத்துவ ஆலோசனை மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் கோரிக்கையின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# இங்கிலாந்தில் கால் பதித்துவிட்டேன்: முதல்வர் ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு



புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்க அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் ஸ்டாலின் இங்கிலாந்து சென்றடைந்தார். அவருக்கு அங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

முதல்வர் ஸ்டாலின் அரசு முறை பயணமாக ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளார். ஜெர்மனியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஸ்டாலின் முன்னிலையில், மொத்தம் 26 ஒப்பந்தங்களின் வழியே, ரூ.7020 கோடி முதலீடு கிடைத்துள்ளது.

தற்போது ஜெர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு முதல்வர் ஸ்டாலின் இங்கிலாந்து சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. திரண்டிருந்த பலர் முதல்வர் ஸ்டாலினுக்கு பூங்கொடுத்து வரவேற்பு அளித்தனர். செல்பி புகைப்படம் எடுத்தும் மகிழ்ந்தனர்.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் தமது எக்ஸ் வலைதள பதிவில் கூறி உள்ளதாவது

இங்கிலாந்தில் கால் பதித்துவிட்டேன்.தொலைதூரங்களை கடந்து உற்சாகத்துடனும், பாசத்துடனும் அரவணைக்கப்பட்டேன். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.(ஐ)

## கழுதைகளைப் பற்றி யாராவது கவலைப்படுகிறார்களா: கேட்கிறார் கமல்!



"தீர்வு ரொம்ப சிம்பிள்ங்க. விஷயம் தெரிந்தவர்கள், உலக சரித்திரம் தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள்" என, தெரு நாய் பிரச்னைக்கான தீர்வு குறித்து கமல் தெரிவித்தார்.

சென்னையில் நிருபர்களை ராஜ்யசபா எம்பி கமல் சந்தித்தார். அதன் விபரம் பின்வருமாறு:

நிருபர்: முதல்வர் வெளிநாட்டு பயணம் குறித்து பாஜவினர் விமர்சனங்களை முன்வைக்கின்றனர்?

கமல் பதில்: ஒருத்தர் நல்லது செய்யும் போது எந்த கட்சி என்று நான் பார்ப்பது இல்லை. நாட்டுக்கு நல்லது நடக்கிறது என்றால், அது எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நிருபர்: அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

கமல் பதில்: அது பற்றி ஒரு பெரிய கட்டுரை எழுதி இருக்கிறேன்.

புரட்சி சிந்தனைகளுக்கு விதையிட்டது யார்?

நிருபர்: பீஹாரில் ராகுல் நடைபயணத்தில் பிரதமரின் தாயை அவமதித்துள்ளனர். இது குறித்து உங்கள் கருத்து என்ன?

கமல் பதில்: யாரையும் அவமானம் படுத்தும் வகையில் யாரும் பேச வேண்டிய அவசியம் இல்லை. ஓட்டு காணாமல் போனது, பெயர் காணாமல் போனது எல்லாம் நான் ரொம்ப நாளாக சொல்லி கொண்டு இருக்கிறேன்.

என்னுடைய பெயரே காணாமல் போய் இருக்கிறது. போய் சொல்லி சரி செய்து கொள்வது எல்லாம் சின்ன விஷயம் தான்.

நிருபர்: தமிழகத்தில் தெருநாய் பிரச்னைகளால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு என்ன தீர்வு?

கமல் பதில்: தீர்வு ரொம்ப சிம்பிள்ங்க. விஷயம் தெரிந்தவர்கள், உலக சரித்திரம் தெரிந்தவர்கள், சமூக சுகாதாரம் என்ன என்று தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். கழுதை எங்கையாவது காணவில்லை என்று யாராவது கவலைப்படுகிறார்களா? கழுதைகள் காணாமல் போய்விட்டதா? நமக்காக எவ்வளவு பொதி சுமந்து இருக்கிறது. கழுதையை இப்பொழுது பார்ப்பதே இல்லையே. கழுதையை யாராவது காப்பாற்ற வேண்டும் என்று பேசுகிறார்களா? எல்லா உயிரினங்களையும் முடிந்த அளவுக்கு காப்பாற்ற வேண்டும். எவ்வளவு முடியுமோ, அவ்வளவு காப்பாற்ற வேண்டும். அது தான் என்னுடைய கருத்து.? (ஐ)

## மழையால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்க வேண்டும்: ராகுல் காந்தி



பருவமழை துவங்கியத்திலிருந்து ஜம்மு - காஷ்மீர், பஞ்சாப், உத்தரகாண்ட், ஹிமாச்சல், ஹரியானா உள்ளிட்ட வட மாநிலங்களில் பரவலாக கனமழை பெய்து வருகிறது. உத்தரகாண்ட், ஹிமாச்சல், ஜம்மு - காஷ்மீரில் அவ்வப்போது மேகவெடிப்பு காரணமாக அதிதீவிர கனமழை பெய்வதால் நிலச்சரிவு ஏற்படுவதோடு, விபத்துகளும் நடக்கின்றன. இதனால் அம்மாநிலங்களில் உள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. மழை, வெள்ளத்தால் ஆயிரக் கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர்.

இந்நிலையில் மழையால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்க வேண்டும்என எதிர்க்கட்சித்தலைவர்ராகுல்காந்தி வலியுறுத்தியுள்ளார். மேலும் இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது "பஞ்சாபில் வெள்ளம் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளது. ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களின் நிலைமை மிகவும் கவலையளிக்கிறது.

இதுபோன்ற கடினமான காலங்களில், உங்கள் கவனமும் மத்திய அரசின் தீவிர உதவியும் மிகவும் அவசியம். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வீடுகள், உயிர்கள் மற்றும் அன்புக்குரியவர்களைக் காப்பாற்ற போராடி வருகின்றன.


இந்த மாநிலங்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு - உடனடியாக ஒரு சிறப்பு நிவாரணப் நிதி அறிவிக்கப்பட வேண்டும் என்றும், நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும்என்றும் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.(ஐ)




## புரிந்துணர்வு ஒப்பந்தம் ரயில்வே ஊழியர்களுக்கு ரூ.1 கோடி விபத்து காப்பீடு


ரயில்வே அமைச்சகம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில், " ஸ்டேட் வங்கியில் சம்பள கணக்குகளை பராமரிக்கும் ரயில்வே ஊழியர்கள் ரூ.1 கோடி விபத்து மரண காப்பீடு பெறுவார்கள். எந்த பிரீமியமும் செலுத்தவோ அல்லது எந்த மருத்துவ பரிசோதனையும் செய்யாமலேயே ரூ.10 லட்சம் இயற்கை மரண காப்பீடு திட்டத்திற்கு தகுதி பெறுவார்கள்.

விமான விபத்தில் பலியானால் ரூ.1.60 கோடி மற்றும் கூடுதலாக ரூபே டெபிட் கார்டில் ரூ.1 கோடி கூடுதலாக இழப்பீடு வழங்கப்படும். விபத்தில் நிரந்தர பாதிப்பு ஏற்பட்டால் ரூ.1 கோடி மற்றும் ஓரளவு பாதிப்பு ஏற்பட்டால் ரூ.80லட்சம் காப்பீடு வழங்கப்படும்" என குறிப்பிடப்பட்டுள்ளது.(ஐ)




## சர்வதேச விண்வெளி நிலையத்தில் சாப்பிடுவது எப்படி?

சர்வதேச விண்வெளி நிலையத்தில் கால் பதித்த முதல் இந்தியர் மற்றும் விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது இந்தியர் சுபான்ஷு சுக்லா ஆவார். சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்தபோது எப்படி உணவு சாப்பிட்டேன் என்ற அனுபவத்தை சுபான்ஷு சுக்லா வீடியோ வெளியிட்டு விளக்கி உள்ளார். அவர் இன்ஸ்டாகிராமில் வெளியிட்ட வீடியோ வைரலாகி பல்வேறு தரப்பினர் கவனத்தை ஈர்த்துள்ளது. இது தொடர்பாக சுபான்ஷு சுக்லா வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: விண்வெளியில் உணவு சாப்பிட கற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. விண்வெளியில் சாப்பிடும்போது பழக்கவழக்கங்கள் ஏன் முக்கியம் என்பதை இங்கே விளக்குகிறேன். இது தொடர்பாக நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால் உங்களுக்கு குழப்பம் வரலாம். இது குறித்து வீடியோவில் விளக்கியுள்ளேன். விண்வெளியில் வேலை செய்வதற்கு தாரக மந்திரம் என்னவென்றால் பொறுமையாக இருக்க வேண்டும். இவ்வாறு சுபான்ஷு சுக்லா கூறியுள்ளார். (ஐ)



# முயற்சி



முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்று சொல்வார்கள். நம்மால் இது நிச்சயம் முடியாது என்று எண்ணும் கடினமான காரியங்களைக்கூட திரும்பத் திரும்ப விடாமுயற்சியுடன் செய்தால் கட்டாயம் வெற்றி அடைய முடியும். அது நமக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டும்.

ரால்ப் எமர்சன், "எந்தச் செயலைச் செய்வதற்கு விடாமுயற்சி எடுக்கிறோமோ அதனை சாதிக்க முடிகிறது் சாதிக்கிறபோது அந்தச் செயல் ஒன்றும் எளிமையாகி விடவில்லை நமது முயற்சி அதனை செய்து முடிக்க எளிதாக்குகிறது" என்கிறார்.

எந்தக்காரியமுமே ஆரம்பிக்கும்போது மலைப்பாகத்தான் தோன்றும். குழந்தைகள்கூட நடக்க ஆரம்பிப்பதற்கு முன்னால் விழுந்து எழுந்துதான் நடை பயிலுகின்றன்ன. கீழே விழுகிறோமே என்று அவர்கள் முயற்சிக்காமல் விடுவதில்லை. விடாமுயற்சி மட்டும் இல்லாவிட்டால் பல சாதனைகள் நிகழ்ந்திருக்க மாட்டா.

தாமஸ் ஆல்வா எடிசன் சொல்கிறார், "ஒரு தோல்வி ஏற்பட்டால் மேலே முயற்சி செய்யாமல் இருப்பதுதான் நமது பலவீனமே. இன்னுமொருமுறை முயற்சி செய்து பார்ப்போமே எனும் எண்ணம்தான் வெற்றிக்கு



நிச்சயமானவை" என்று.

புத்தகங்களைத் தொடர்ந்து படித்து வந்தால் பல அறிஞர்களின் பொக்கிஷங்களை நம்மால் அறிய முடியும். நாம் எல்லாம் படித்து முடித்துவிட்டோம் என்று எண்ணுவது சுலபம். ஆனால் கற்றது கைம்மண்ணளவுதான் என்று புத்தகச் சுரங்கங்களைத் தோண்டத் தோண்டப் புரியும். ஒவ்வொரு சாதனையாளரும் ஆரம்பத்தில் எவ்வளவு சோதனைகளை சந்தித்திருக்கிறார்கள்! அரசியல், ஆராய்ச்சி, இலக்கியம், இசை என்று எந்தத் துறையிலும் சரித்திரப் புகழ் பெறுவதற்கு முன்னால் எத்தனை முறை தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள் என்பதும் தெரியும்.

1936ல் தியோடர் சேயஸ் கீசல் எனும் நாவலாசிரியர் ஐரோப்பாவிற்குக் கப்பலில் பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது கப்பல் எஞ்சின் சத்தத்தின் தாளகதி அவரை ஒரு பாடலை எழுதத் தூண்டியது. அதை அடிப்படையாக வைத்து ஒரு நாவலை எழுதினார். அந்த நாவல் பதிப்பாளர்களால் 27 முறை ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்டது. பலர் இரண்டு மூன்று முறை தோல்வி கிடைத்தபின் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று விட்டு விடுவார்கள். ஆனால் 27 முறை தோல்விக்குப் பிறகு அவரது நண்பர் ஒருவர் அவருக்காக அந்த நாவலைப் புத்தகமாக வெளியிட்டார் வெற்றியும் அடைந்தார். எழுதிய டாக்டர் சேயஸ் 1991ம் ஆண்டு இறந்தார். அதற்குள் அவரது புத்தகம் 200 மில்லியன் பிரதிகள் 15 மொழிகளில் விற்றிருந்தன. அவரது இறப்பிற்குப் பிறகு மேலும் 22 மில்லியன் பிரதிகள் விற்றன.

'மல்பெரி தெருவில் அதைப் பார்த்தேன் என்று நினைக்கும்போது' என்ற தலைப்பிலான அந்தப் புத்தகத்தின் கதாபாத்திரங்கள் அனைத்துக் குழந்தைகளின் மனதிலும் குதூகலத்தை ஏற்படுத்தியது. அந்த எழுத்தாளரின் விடாமுயற்சிக்குக் கிடைத்த பரிசு இது.


ஹாரிபாட்டரை உருவாக்கிய ஜே.கே.ரௌலிங்கைப் பற்றி தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. மணமுறிவானதால் நிலைகுலைந்திருந்த பெண்மணி. கீசலைப்போலவே இவருக்கும் குழந்தைகளுக்கான புத்தகம் எழுதவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அவருக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. போதுமான பண வசதியில்லாததால் கிடைக்கும் நன்கொடைகள் மூலமே வாழ்க்கை நடத்தி வந்தார். ஆனாலும் தான் எழுதவேண்டும் என்ற முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்தார். கொஞ்சம் கொஞ்சமாக தனது ஹாரிபாட்டர் கதையைப் பல வருடங்கள் தொடர்ந்து எழுதினார். அவருக்குத் தான் எழுதும் கதை மற்றவர்களுக்குப் பிடிக்குமா என்று சந்தேகம்! யாராவது பிரசுரிக்க மாட்டார்களா? என்ற ஆர்வம் மட்டும் இருந்தது. அவர் சொல்கிறார், "நான் குழந்தையாக இருந்தபோது எனக்கு என்ன படிக்கப் பிடிக்குமோ அதைத்தான் நான் எழுதினேன்' என்று.

பல பதிப்பாளர்கள் அவரது புத்தகத்தைப் பிரசுரிக்க மறுத்துவிட்டார்கள் ஒருவரைத் தவிர. ஹாரிபாட்டர் புத்தகங்கள் இன்று எவ்வளவு பிரபலமானவை என்று நாம் அனைவரும் அறிவோம்.

2004ம் ஆண்டுக்குள் நூற்றுக்கணக்கான கோடி டாலர்கள் அவருக்குக் கிடைத்தது. லட்சக்கணக்கானோர் அவரது புத்தகங்களை வரிசையில் காத்து நின்று வாங்கினார்கள். அவரது விடாத முயற்சி அவருக்கு அலாவுதீனின் அற்புத விளக்காக இருந்தது. அவரது விடாமுயற்சிக்கு முன்னால் ஹாரிபாட்டரின் மந்திர வித்தைகள் கூட ஒன்றுமே இல்லை எனலாம்!

வெற்றிக்குப் பிறகு அவர் சொன்னார், "எனது புத்தகம் பிரசுரமானதே ஓர் அற்புதமான நிகழ்வுதான். ஆனால் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசு வாசகர்கள் காட்டும் உற்சாகம்தான்". டி,வியின் முன்னால் கட்டுண்டு கிடந்த குழந்தைகளை தனது புத்தகங்களின் மூலம் மீட்டெடுத்ததே அவர்தான். பல லட்சக்கணக்கானோருக்குப் படிப்பதால் ஏற்படும் சந்தோஷத்தைத் தன் புத்தகங்கள் மூலம் காட்டினார்.

தோல்விகள் கதவை மூடும்போது தொடர்ந்து விடாமுயற்சியுடன் கதவுகளைத் தட்டித் திறப்பதுதான் வெற்றிக்கான சாவி. விவேகானந்தர் சொல்கிறார், "வெற்றி பெறுவதற்கு தேவையானது முடிவில்லா விடாமுயற்சியும், அதீதமான நம்பிக்கையும்தான்! விடாமுயற்சி கொண்டவன், 'நான் சமுத்திரத்தையும் உட்கொள்வேன்', 'என் சங்கல்ப சக்தியால் மலைகளும் நொறுங்கி விழுந்துவிடும்' என்று சொல்வான். அது போன்ற சக்தியை கொண்டிரு, அது போன்ற மன உறுதியைக் கொண்டிரு் நன்றாக உழைத்திரு, உனது



குறிக்கோளை நிச்சயம் நீ அடைவாய்".

கடலை நோக்கி மலை சொல்லியது. "நான் உன்னைவிட பலசாலி. என்னை யாரும் அழிக்க முடியாது" என்று. ஆனால், பல ஆயிரம் ஆண்டுகளில் கடலின் அலைகளால்

(7ஆம் பக்கம் பார்க்க..)

# ஐரோப்பிய நாடுகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தும் அபாயம்: பிரான்ஸில் உள்ள மருத்துவமனைக்கு பறந்த அவசர உத்தரவு



ரஷ்யாவின் தாக்குதல் அபாயம் குறித்து ஜெர்மனி அதிபர் எச்சரித்த நிலையில், மருத்துவமனைகளை ஆயத்த நிலையில் வைக்க பிரான்ஸ் உத்தரவிட்டு இருப்பது பெரும் போர் குறித்த பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரை நிறுத்த அமெரிக்க அதிபர் டிரம்ப் முயற்சியால் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஆனால், உக்ரைனுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க நேட்டோ நாடுகளின் துருப்புகளை நிறுத்தக்கூடாது என ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்தது. ஐரோப்பிய நாடுகளின் படைகளும் நேட்டோ படைகளாகவே கருதப்படும் என்று ரஷ்யா கூறியிருந்தது. இந்நிலையில், ஜெர்மனியின் ராக்ஸ்டாக் நகர் அருகே பால்டிக் கடல் பகுதியில் அந்நாட்டு கடற்படையினர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ஹெலிகாப்டரில் சென்று போர் கப்பலில் இறங்கி அதை பார்வையிட்ட ஜெர்மனி அதிபர் ஃபிரெட்ரிக் மெர்ஸ், ரஷ்யாவால் போர் அபாயம் நேரக்கூடும் என்று எச்சரித்தார். இந்நிலையில், பிரான்ஸ் அரசு நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மிகப்பெரிய போர் சூழலை சமாளிக்க ஆயத்தமாக வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது. கடந்த ஜூலை மாதம் 18ம் தேதியே மண்டல சுகாதார அதிகாரிகளுக்கு சுகாதாரத்துறை அனுப்பிய சுற்றறிக்கையில், ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ராணுவ வீரர்களுக்கு சிகிச்சை அளிக்க 10லிருந்து 180 நாட்களுக்குள் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. விமான நிலையம், துறைமுகம், ரயில் மற்றும் பேருந்து நிலையங்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் வெளிநாட்டு ராணுவத்தினருக்கு உடனடியாக சிகிச்சை அளித்து சொந்த நாட்டுக்கு அனுப்புவதற்கான அவசியம் ஏற்படும் என்றும் பிரான்ஸ் அரசு கூறியுள்ளது. இது போர்ப்பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், பெலாரஸ் நாட்டுடன் இணைந்து வருகின்ற 12ம் தேதியில் இருந்து 5 நாட்கள் ரஷ்யா போர் ஒத்திகையில் ஈடுபட உள்ளது. இதில் அணு ஆயுதங்களையும் ரஷ்யா பயன்படுத்த போவதாக தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

## பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 15 பேர் உயிரிழப்பு: 30 பேர் காயம்!



பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 15 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர். தென்மேற்கு மாகாணமான பலுசிஸ்தானின் தலைநகர் குவெட்டாவில் பாகிஸ்தானின் பலூச் தலைவர் அதாவுல்லா மெங்கலின் நினைவு தினத்தை முன்னிட்டு, பேரணி ஒன்று நடந்தது. பேரணியில் பங்கேற்ற மக்கள் அனைவரும் வீடு வீடு திரும்ப தயாரான போது திடீரென தற்கொலை படை தாக்குதல் நடந்தது. மக்கள் கூடியிருந்த பகுதியில் குண்டு வெடித்ததில், 15 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலில், பலூச் தலைவர் அதாவுல்லா மெங்கலின் மகன், அக்தர் மெங்கல், பாதுகாப்பாக தப்பினார். மேலும் 30 பேர் பலத்த காயம் அடைந்துள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த குண்டுவெடிப்பு குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். வடமேற்கு பாகிஸ்தானில் ஒரு துணை ராணுவ தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஆறு பாதுகாப்பு வீரர்கள் மற்றும் ஆறு பயங்கரவாதிகள் உட்பட 12 பேர் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர். (ஐ)

## பெண் ஊழியருடன் காதல் நெஸ்லே நிறுவன சிஇஓ பதவி பறிப்பு

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த உணவுப் பெருநிறுவனமான நெஸ்லே, தனது தலைமைச் செயல் அதிகாரி லாரன்ட் பிரெக்ஸை பதவி நீக்கம் செய்துள்ளது. நிறுவனத்தின் நடத்தை விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனக்குக் கீழ் பணிபுரியும் பெண் ஊழியர் ஒருவருடன் இருந்த காதல் உறவை அவர் நிர்வாகத்திடம் தெரிவிக்கத் தவறியதால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் தலைவர் பால் பல்கே தலைமையில் நடத்தப்பட்ட விசாரணையில், லாரன்ட் பிரெக்ஸ் மீதான குற்றச்சாட்டு உறுதியானதைத் தொடர்ந்து, இந்த பதவி நீக்கம் உடனடியாக அமலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது.

அவருக்குப் பதிலாக, பிலிப் நவ்ராடில் புதிய தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 40 ஆண்டுகளாக நெஸ்லே நிறுவனத்தில் பணியாற்றிய பிரெக்ஸ /க்கு, பணியிலிருந்து வெளியேறுவதற்கான எந்தவிதமான நிதிப் பலன்களும் வழங்கப்படாது என்று நிறுவனம் உறுதி செய்துள்ளது. (ஐ)





## இந்தியாவுக்கு கூடுதல் எஸ் 400 வான் பாதுகாப்பு கவசம்:

இந்தியாவுக்கு கூடுதலாக எஸ் 400 வான் பாதுகாப்பு கவச அமைப்புகளை வழங்க பேச்சு நடத்தி வருவதாக ரஷ்யா கூறி இருக்கிறது.

எஸ் 400 என்பது ரஷ்யா உருவாக்கிய வான் பாதுகாப்பு கவச அமைப்பு ஆகும். அதிநவீன தொழில்நுட்பத்தால் தயாரிக்கப்பட்ட இந்த கவச அமைப்பு, உலகின் முதன்மையான வான் பாதுகாப்பு ஆயுதமாக பார்க்கப்படுகிறது.

இந்த கவச அமைப்புக்கு இந்தியா சுதர்சன சக்கரம் என்று பெயர் சூட்டியுள்ளது.

அண்மையில், பஹல்காம் சம்பவத்தைத் தொடர்ந்து, பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத நிலைகள் மீது இந்தியா அதிரடி தாக்குதல் நடத்தியது.

இதை எதிர்த்து பாகிஸ்தான் நடத்திய ஏவுகணை தாக்குதல், ட்ரோன் தாக்குதல்களை எஸ் 400 வான் பாதுகாப்பு கவச அமைப்பு வெற்றிகரமாக முறியடித்தது.

வான்வெளியில் 600 கிமீ தொலைவில் இருந்து வரும் எதிரி ஏவுகணையை 400 கிமீ தூரம் வரை வானில் இடைமறித்து தாக்கும் திறன் கொண்டது இந்த கவச அமைப்பு.

இந்தியா ஏற்கனவே 5 எண்ணிக்கையிலான எஸ் 400 கவச அமைப்புகளை வாங்க ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி 3 எண்ணிக்கை எஸ் 400 கவச அமைப்புகள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டு விட்டன.

உக்ரைன் போர் காரணமாக மீதமுள்ள இரண்டு எஸ் 400 கவச அமைப்புகளை இந்தியாவுக்கு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியைத் தொடர்ந்து கூடுதலான எஸ் 400 கவச அமைப்புகளை வாங்க இந்தியா ஆர்வம் காட்டி வருகிறது.

இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக ரஷ்யா ராணுவ பாதுகாப்பு தொழில்நுட்ப தலைவர் டிமிட்ரி ஷூகாயேவ் கூறி உள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், ஏற்கனவே எஸ் 400 வான் பாதுகாப்பு ஏவுகணைகளை இந்தியா வாங்கி இருக்கிறது. தற்போது புதிய வினியோகங்களுக்கான பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன என்றார்.

## ரயிலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார். இந்தப் பெண் கைத்தொலைபேசியில் உரையாடியவாறு தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட வேளை விபத்து இடம்பெற்றுள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ரயிலில் மோதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் களுவன்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளின் தந்தையே (வயது 26) உயிரிழந்துள்ளார்.

ரயில் ஒன்று மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அந்த வேளை வாகனச் சாரதியான இந்த நபர் களுவன்கேணி பிரதேசத்தில் இருந்து செங்கலடி நகரத்துக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை ரயிலில் மோதி படுகாயமடைந்தார்.

அதையடுத்துக் காயமடைந்த நபரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கான பயண உதவியாக, ரயில் சாரதி, ரயிலை பின்னோக்கிச் செலுத்தி, ஏறாவூர் ரயில் நிலையத்தில் விபத்துக்குள்ளானவரை ஒப்படைத்தார். எனினும், அங்கு அவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நசீர் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று அவதானித்ததோடு, வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

ஏறாவூர் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனை ஓமந்தையில் அமைப்பதா அல்லது தாண்டிக்குளத்தில் அமைப்பதா என்று அரசியல்வாதிகளுக்கிடையில் ஏற்பட்ட இழுபறிகளுக்கு மத்தியில் மதவுவைத்தகுளத்தில் அது அமைக்கப்பட்டது.

எனினும், விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டு ஏழு வருடங்கள் கடந்த நிலையிலும் பல்வேறு காரணங்களால் அது இயங்க முடியாத சூழல் ஏற்பட்டதுடன் அதன் கட்டுமானத்திலும் பழுதுகள் ஏற்பட்டன.

இந்தநிலையில், அந்த நிலையத்தில் மீண்டும் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இன்று மக்கள் பாவனைக்காக அது கையளிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் 50 கடைகள் அனைத்து வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக 35 கடைகள் வவுனியா மொத்த வியாபார சந்தை வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கடை சதொச நிறுவனத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வர்த்தக வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் பிரதி அமைச்சர்களான எம்.ஜெயவர்த்தன, உபாலிசமரசிங்க, வவுனியா மாநகர சபை மேயர் சு.காண்டீபன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரால் நாடா வெட்டி திறந்துவைக்கப்பட்டது.

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

லொறி ஒன்றும் பவுசர் வாகனம் ஒன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லொறியில் பயணித்த இருவரே உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்குமூலம் வழங்கிய பின்னர் ராஜித சேனாரத்ன இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இருந்து மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதி காலை ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறு இன்று இரவு வெளியாகும்?

கொழும்பு, செப். 03

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று வெளியிடப்படும் எனப் பரீட்சைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று இரவு வெளியிடப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன என்று அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது.

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 787 மையங்களில் புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்றது.

இதேவேளை, இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 951 ஆகும்.

## உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

சம்மாந்துறை, செப். 03

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிர்தௌஸ் பள்ளிவாசல் வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்படும் மூன்று மாடி வீட்டின் மேல் அறை ஒன்றில் இருந்து உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் இன்று புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது..

சடலமாக மீட்கப்பட்டவர் சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய நபராவார்.

இவர் கடந்த 15 நாள்களாகக் காணாமல் சென்றிருந்த நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆடியபாதம் வீதியூடாக டிப்பர் வாகனம் பகலில் பயணிப்பதற்கு முற்றாகத் தடை

யாழ்ப்பாணம், செப். 03

யாழ். புதிய செம்மணி வீதிச் சந்தியில் இருந்து கொக்குவில் சந்தி வரையான ஆடியபாதம் வீதியூடாக டிப்பர் வாகனங்கள் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பயணிப்பதற்கு முற்றாகத் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய பாரவூர்திகள் காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை மற்றும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை அந்த வீதியூடாகப் பயணிப்பதற்குத் தடை விதித்து பொதுப்போக்குவரத்தை இலகுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளி சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் பணிக்குச் செல்லும் நேரங்கள் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வீதி விபத்துக்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பொதுப்போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்குடன் இந்த விடயங்கள் குறித்து நல்லூர் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டது. இந்தப் போக்குவரத்துத் தடை நடைமுறைக்கு வந்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் பலகைகள் வீதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, வாகன சாரதிகள் இந்த விதிமுறைகளைப் பின்பற்றுமாறு நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் அறிவுறுத்தியுள்ளார்.

## பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சிசுவின் சடலம் மாயம்- கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சம்பவம்!

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த சிசுவின் சடலம் காணாமல் போயுள்ளதாக மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி மாளிகாவத்தை ரயில்வே பாதையில் நிறுத்தப்பட்டிருந்த ரயிலின் கழிவறையில் குழந்தையின் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் தெமட்டகொட பொலிஸார் விசாரணை நடத்தி, நீதவானின் உத்தரவின் பேரில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் சிசுவின் உடலை ஒப்படைத்துள்ளனர்.

இந்தநிலையில் தெமட்டகொடை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குறித்த சடலம் தொடர்பில் மரண பரிசோதனை நடத்துவதற்காக கடந்த 29 மற்றும் 31ஆம் திகதிகளில் கொழும்பு தேசிய மருத்துவமனை பிணவறைக்குச் சென்று விசாரித்தபோது, அதன் சடலம் அங்கிருந்து காணாமல் போயுள்ளமை தெரியவந்துள்ளது.

எனவே இந்த விவகாரம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை பொலிஸின் 159ஆவது ஆண்டு நிறைவு தினம் இன்று!

*இலங்கை பொலிஸின் 159ஆவது ஆண்டு நிறைவு தினம் இன்று (3) கொண்டாடப்படுகிறது.*

*1866 செப்டம்பர் 3ஆம் திகதி அன்று முதல் பொலிஸ் நிலையம் நிறுவப்பட்டு, ஜி. டபிள்யூ. ஆர். கேம்பல் முதல் பொலிஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.*

*அதன்படி குறித்த இந்தத் திகதி இலங்கை பொலிஸின் ஸ்தாபக நாளாகக் கருதப்படுகின்றது.*

*இதனை நினைவுகூரும் வகையில், இன்று பொலிஸ் களப் படை தலைமையகத்தில் விசேட நினைவு விழா ஒன்று இடம்பெறுகின்றது.*

*இதன்போது பொலிஸ் மரியாதை அணிவகுப்பு மற்றும் சேவையில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.*

*விழாவிற்கு ஏற்பாடாக கொழும்பு போக்குவரத்துப் பிரிவு விசேட போக்குவரத்துத் திட்டத்தை அறிவித்துள்ளதுடன், கொழும்பு போக்குவரத்துப் பிரிவு ஊடாக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*அதன்படி, பம்பலப்பிட்டி பொலிஸ் பிரிவில் உள்ள தும்முல்ல சந்தியிலிருந்து திம்பிரிகஸ்யாய சந்தி வரையிலான ஹெவ்லொக் வீதியில் பின்வரும் போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன:*

*பொலிஸ் களப் படைத் தலைமையகத்திற்கு எதிரே உள்ள கொழும்பு வெளியேறும் வீதியிலுள்ள பேருந்து நிறுத்தம், செப்டம்பர் 3, 2025 அன்று பிற்பகல் 2:30 முதல் மாலை 7:00 மணி வரை, ஹெவ்லொக் வீதி-பொன்சேகா வீதி சந்தியில் உள்ள பேருந்து நிறுத்தத்திற்கு தற்காலிகமாக மாற்றப்படும்.*

*ஹெவ்லொக் வீதியில், தும்முல்ல சந்தியிலிருந்து திம்பிரிகஸ்யாய சந்தி வரை, கனரக வாகனப் போக்குவரத்து (கன்டெய்னர் வாகனங்கள் மற்றும் டிப்பர் லொறிகள்) செப்டம்பர் 3 ஆம் திகதி பிற்பகல் 2:00 முதல் மாலை 7:00 மணி வரை மட்டுப்படுத்தப்படும்.*

## முயற்சி...

மலை மறைந்தது கடல் அலைகள் தொடர்ந்தன. ஓரிரு முறை தோல்வியை சந்தித்துவிட்டால் பின் துவண்டுவிடாதே! தோல்வி நிரந்தரம் அல்ல, தோல்வியுற்றால் அதில் உள்ள தவறை ஒத்துக்கொண்டு அதிலிருந்து மீண்டு முன்னேறு! ஆனால் ஒருபோதும் முயற்சி செய்ய மறக்காதே!" இதனை மறவாமல் இருந்தாலே வெற்றி நம் காலடியில் சரணடையும்.

நம் நாட்டின் நோபல் பரிசாளர் தாகூரின் ஆரம்ப காலத்துக் கவிதைகளை வங்கமொழி அறிஞர்கள் பிழைதிருத்தத்திற்கு எடுத்துக் கொடுப்பார்கள். அவ்வளவு அவமானப்பட்டவர்தான் தாகூர். அவரது மேதாவிலாசத்தை விடவும் அவரது விடாமுயற்சியே அவருக்கு நோபல் பரிசைக் கொண்டுவந்து கொடுத்தது.

பெர்னாட்ஷாவின் வாழ்க்கை கொடுமையான வறுமை நிறைந்த வாழ்க்கை. அவரது அறிவோடு தினம் ஐந்து பக்கம் எழுதும் விடாமுயற்சியை அவரை உலக அறிஞராக்கியது. விடாமுயற்சிக்கு உதாரணங்களாக, மேடம் கியூரி மார்க்கபோலோ என்று அடுக்கிக் கொண்டே போகலாம். காந்திஜியின் விடாப்பிடியான அஹிம்சை கொள்கைதானே நமக்கு சுதந்திரத்தையே வாங்கித் தந்தது! உலகில் சாதனையாளர்கள் எல்லாரிடத்திலும் அவரவர் துறைசார் அறிவோடு விடாமுயற்சியும் இருந்து வருகிறது. அதனாலே அவர்கள் வெற்றி பெற்றார்கள் சாதனை படைத்தார்கள் தொடர்ந்தும் வருகிறார்கள்.

வெற்றிக்கான பாதையாக எடிசன் கூறுவது : "தேவையானது ஒரு சதவிகிதம் ஊக்கம் 99 சதவிகிதம் விடாமுயற்சி"

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கூலிடிஸ் சொல்கிறார், "இந்த உலகில் முயற்சியை விட வேறொன்றும் சிறந்த இடத்தைப் பெற்றுவிட முடியாது. திறமை, மேதைத்தனம், கல்வி இவ்வளவு இருந்தாலும் அதனுடன் விடாமுயற்சியும், எதை அடையவேண்டும் என்ற தெளிவான முடிவும் மட்டுமே வெற்றிக்கு வழிகாட்டும் சர்வ வல்லமை படைத்தது" என்று.

நம்ம ஊர் வள்ளுவரும் இதைத்தானே சொல்கிறார், "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்" என்று!

நமக்கு வெற்றிகள் வந்து சேர்வதற்கென்று தனியாக ஒரு நேரம் எதுவும் இல்லை. விடாமுயற்சியோடு செயல்படுகின்றவர்களிடத்தில் எந்த நேரத்திலும் வெற்றிகள் வந்து சேரும். சிகரங்கள் காத்திருக்கின்றன சிகரங்களை எட்ட நீங்கள் தயாராகுங்கள்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk